**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **CC. 08/2017.** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **PW.3 சூரியபிரபு** |
| **Fathers Name/Husband Name** | : | **ஜெயராஜ்** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22.09.2022

---

**முதல் விசாரணை:**

**1.**நான் திடீர்நகரில் குடியிருந்து வருகிறேன். அசா.1ஐ சம்பவத்தின் போது தெரியும். சம்பவ சாட்சிகள் ஜெயபிரகாஷ், சின்னசாமி, சந்திரசேகரன், முகமதுரபீக் ஆகியோர்களை தெரியும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 10 முதல் 10.30 மணியளவில் தொ.விலக்கு அருகே ரைஸ்மில் அருகே நானும் சாட்சிகள் ஜெயபிரகாஷ், சின்னசாமி, சந்திரசேகரன், முகமதுரபீக் ஆகியோரும் பேசிக்கொண்டு இருந்தோம். அப்போது டம் என்று சத்தம் கேட்டது.

2. நாங்கள் அருகில் சென்று பார்த்தபோது மேற்கிலிருந்து வந்த பிக்அப் வேன் ஜான்ட் கட்டாகி கவிழ்ந்து போது எதிரே வந்த லாரி அதன்மீது மோதி பிக்அப் வண்டியில் இருந்த 5,6 நபர்கள் மீது ஏறிவிட்டது. 4,5 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது., 5 நபர்கள் இறந்துவிட்டார்கள். ஒருவரை ஆம்புலன்சில் ஏற்றிவிட்டோம். ஊர்காரர்கள் கூடிவிட்டார்கள். லாரி ஓட்டுநரை சம்பவதினத்தன்று நான்

கவனிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**3.** எதிரே வந்த லாரி கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது. நான் விபத்து எப்படி ஏற்பட்டது என்று நேரடியாக பார்க்கவில்லை, சத்தம் கேட்டு தான் பார்த்தேன். நான் சென்று பார்த்தபோது எதிரியின் லாரி சாலையின் தென்புறம் மண்பகுதியில் இறங்கி நின்றது என்றால் சரிதான். பூ வண்டியில் வந்த நபர்கள் சாலையில் சிதறிக்கிடந்தார்கள் என்றால் சரிதான். பூ வண்டியில் ஜான்ட் உடைந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

S.d./ Suryaprabhu

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.